# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.T.C. No. 248/2025** |
| Prosecution witness | : | P.W. 2 |
| List of witness | : | L.W. 3 |
| Name | : | கோபிநாத் |
| Father's /Husband Name | : | பரமசிவம் |
| Village | : | நவல்பட்டு காவல்நிலையம் |
| Taluk | : | திருவெறும்பூர் |
| Age | : | 50 |
| Occupation | : | உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 21st day of May 2026. Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள நவல்பட்டு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.11.2024 ம் தேதிஅன்று காலை 08.30 மணியளவில் நான் குடவாசல் காவல் நிலையத்தில் பொறுப்பிலிருந்த போது எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி ராதாநல்லூர் பஸ் ஸ்டாப் அருகே அருண்குமார் என்பவர் கஞ்சா விற்பணை செய்வதாக கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று நான் பொது நாட்குறிப்பில் பதிவு செய்தும் நன்னிலம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்து விட்டு என்னுடன் இரண்டாம் நிலைக் காவலர் திரு. குருசீலன் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்களுடன் ராதாநல்லூர் பஸ்ஸ்டாப் அருகே கண்காணித்த போது அங்கு நின்று கொண்டிருந்த நபரை நான் விசாரித்தபோது அவர் தனது பெயர் அருண்குமார் த/பெ. ராமதாஸ் என்று கூறினார். பி ன்னர் அந்த நபரிடம் தாங்கள் கஞ்சா விற்பணை செய்து வருவதாக தகவல் கிடைத்திருப்பதாகவும் சோதனை செய்வதற்கு அருகில் உள்ள நீதிபதியிடமோ அல்லது அரசு பதிவு பெற்ற அலுவலரிடமோ அழைத்துசென்று சோதனை செய்ய வேண்டுமென எழுத்து மூலமாக அறிவிப்பு கொடுத்ததற்கு அந்த நபர் என் னை போலீசாராகிய நீங்களே சோதனைசெய்துகொள்ளலாம் என்று எழுத்து மூலமாக சம்மதம் தெரிவித்தார். அதில் எதிரியின் கையொப்பமும் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் என்னுடன் வந்த போலீசார்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றுள்ளேன். **(சோதனை அனுமதி கடிதம் அ.சா.ஆ.2 ஆகவும் சோதனை சம்மத கடிதம் அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது.)**

நான் அருண்குமாரை சோதனை செய்த போது அவரது இடுப்பில் பாலிதீன் பேப்பரில் சுற்றி மறைத்து வைத்திருந்த பொட்டலத்தை பார்த்தபோது அதில் கஞ்சா இருந்தது. அதைப்பற்றி நான் விசாரித்தபோது அவரிடம் அரசு அனுமதியோ உரிமமோ இல்லை என்று கூறினார். பின்னர் நான் குற்ற காரணம் கூறி 09.15 மணியளவில் கைது செய்து அவரது உறவினருக்கு தகவல் தெரிவித்தேன். நாங்கள் எடுத்து சென்ற கை தராசில் எடைப்போட்ட போது மொத்தம் 150 கிராம் அளவு கஞ்சா இருந்தது. அதிலிருந்து தலா 25 கிராம் எடை உள்ள கஞ்சாவை இரண்டு பொட்டலாங்களாக ஆய்வுக்கு எடுத்து சீல் வைத்து மீதமுள்ள 100 கிராம் கஞ்சாவை சீல் வைத்து 09.30 மணியளவில் என்னுடன் வந்த இரண்டாம் நிலைக் காவலர் திரு. குருசீலன் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்களின் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். தனிநபர் சாட்சிகள் யாரும் அங்கு முன் வராத காரணத்தினால் என்னுடன் வந்த மேற்படி நபர்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன். கைப்பற்றுதல் மகசர் என்னால் தயார் செய்யப்பட்டது தான். **(கைப்பற்றுதல் மகசர் ஏற்கெனவே அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.)** பின்னர் எதிரி மற்றும் தடயப்பொருட்களுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண் 435/2024 சட்டப்பிரிவுகள் 8(c), 20(b)(ii)(A) NDPS Act ன் கீழ் நான் வழக்கு பதிவு செய்தேன் **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் எதிரியை நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தினேன். மேலும் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட தடயபொருட்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து அது நீதிமன்ற வழக்கு சொத்து எண் 44/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டது. **(படிவம் 91 அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட தடயபொருட்களை தடய அறிவியல் ஆய்வறிக்கைக்காக நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து மாதிரிக்கு எடுக்கப்பட்டிருந்த இரண்டு பொட்டலங்களை நீதிமன்றம் மூலம் தடய அறிவியல் ஆய்யவறிக்கைக்கு உட்படுத்தினேன். தஞ்சாவூரில் உள்ள வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் இருந்து நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட தடய அறிவியல் ஆய்வறிக்கை பெறப்பட்டது. **(தடய அறிவியல் ஆய்வறிக்கை Exhibit C1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேற்படி ஆய்வறிக்கையில் கஞ்சா என குறிப்பிடப்பட்டுள்ளது. மாதிரிக்கு எடுத்தது போக மீதமுள்ள மாதிரி கஞ்சாவை ஆய்வகத்திலிருந்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்கள். **(மாதிரி கஞ்சா சா.பொ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மாதிரிக்கு எடுத்தது போக மீதமுள்ள 100 கிராம் கஞ்சாவை மல்கானாவில் வைப்பதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 2 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் நான் பணி மாறுதலில் சென்றுவிட்டபடியால் இவ்வழக்கு கோப்பினை நிலைய பொறுப்பிலேயே வைத்துவிட்டேன்.

பின்னர் இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் திரு.சந்திரசேகரன் என்பவர் தற்போது திருச்சி மாவட்டத்தில் பணிபுரிந்துவருவதாலும் இவ்வழக்கில் நான் முதற்கட்ட விசாரணை செய்த வகையில் எனக்கு தெரியும் என்ற அடிப்படையிலும் நான் சாட்சியமளிக்கிறேன்.

மேற்படி உதவி ஆய்வாளர் திரு.சந்திரசேகரன் என்பவர் பட்டியல் சாட்சி 1,2 ஆகியோர்களை விசாரித்த போது என்னிடம் கூறிய அதே சங்கதிகளை உதவி ஆய்வாளர் திரு.சந்திரசேகரனிடம் கூறியதால் அவர் எவ்வித மறுவாக்குமூலமும் பெறவில்லை.

இத்துடன் அவரது புலன் விசாரணை முடித்து எதிரியின் செய்கையானது சட்டபிரிவுகள் 8(c), 20(b)(ii)(A) NDPS Act ன் கீழ் தண்டித்தக்க குற்றம் என கடந்த 27.12.2024 ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :-

நான் சொன்ன நாள் சொன்ன நேரம் சொன்ன இடத்தில் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரியை கைது செய்ததாக சொல்லப்படும் இடம் மக்கள் நடமாட்டம்அதிகம் உள்ள இடம் என்றால் சரிதான். இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாரும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி தடயபொருளை பதிவு பெற்ற அதிகாரி முன்னிலையில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி சோதனை செய்ய அனுமதி பெற்ற கடிதத்தில் எதிரியின் கையொப்பம் உள்ளதா என்றால் இல்லை. இவ்வழக்கில் நான் தான் முதல் தகவல் அறிக்கை மற்றும் முதல் கட்ட விசாரணை செய்தேன் என்றால் சரிதான். எதிரியிடமிருந்து எந்த தடயபொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. சாட்சிபட்டியலில் உள்ள சாட்சிகள் அனைவரும் காவலர்கள் என்றால் சரிதான். சட்ட விதிமுறைகளை சரிவர பின்பற்றாமல் உதவி ஆய்வாளர் திரு.சந்திரசேகரன் எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், புள்ளிவிவரத்திற்காக எதிரிமீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், எதிரியை சொன்ன நாள் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றாலும் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.21 12:17:44 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`